செ.வெ.எண்:32/ஜனவரி /2020 நாள்: 12.01.2020

திருச்சிராப்பள்ளியில் நடைபெற்று வரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறை திருத்தம் தொடர்பான சிறப்பு முகாமை வாக்காளர் பட்டியல் பார்வையாளராக நியமிக்கப்பட்ட பத்திர பதிவுத்துறை தலைவர்.திருமதி.பி.ஜோதிநிர்மலாசாமி,இ.ஆ.ப., அவர்கள், திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு,இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் இன்று (12.01.2020) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

-----------

திருச்சிராப்பள்ளியில் நடைபெற்று வரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறை திருத்தம் தொடர்பான சிறப்பு முகாமை திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு,இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில், வாக்காளர் பட்டியல் பார்வையாளராக நியமிக்கப்பட்ட பத்திர பதிவுத்துறை தலைவர்.திருமதி.பி.ஜோதிநிர்மலாசாமி,இ.ஆ.ப., அவர்கள், ஆகியோர் இன்று (12.01.2020) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி 01.01.2020 - ஐ தகுதி நாளாக கொண்டு சிறப்பு சுருக்க முறை திருத்தம் நடைபெற்று 23.12.2019 அன்று வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டது.

பொதுமக்கள் பயன்பெறும் வகையில் இளம் வாக்காளர்கள் மற்றும் விடுபட்ட வாக்காளர்களை சேர்பதற்காகவும் தற்போது உள்ள வாக்களார் பட்டியலில் திருத்தங்கள் மற்றும் நீக்கம் செய்வதற்கும், கடந்த 04.01.2020, 05.01.2020, 11.01.2020 மற்றும் இன்று 12.01.2020 ஆகிய நான்கு தினங்களிலும் சிறப்பு முகாம் திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள 1092 வாக்குச்சாவடிகளில் நடைபெற்றது. மேலும், 23.12.2019 முதல் 22.01.2020 வரை அனைத்து நிர்ணயிக்கப்பட்ட அமைவிடங்களிலும் உதவி வாக்குப்பதிவு அலுவலர் அலுவலகங்களிலும், படிவங்கள் பெறப்படும். பொதுமக்கள் இச்சிறப்பு முகாமை பயன்படுத்திக்கொள்ளலாம்.

இதனைத் தொடர்ந்து இன்று (12.01.2020) திருச்சிராப்பள்ளியில் நடைபெற்று வரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறை திருத்தம் தொடர்பான சிறப்பு முகாமை, சேவாசங்கம் பெண்கள் மேல்நிலைப்பள்ளி, கேம்பியன் ஆங்கிலோ இந்தியன் மேல்நிலைப்பள்ளி, திருச்சிராப்பள்ளி மாநகராட்சி அலுவலகத்தின் கீழ் தளத்தில் அமைக்கப்பட்ட வாக்காளர் சேவை மையம், நாகமங்கலம் நல்லசமாரியன் உயர்நிலைப்பள்ளி, அளுந்தூர் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி, ஆகிய வாக்குச்சாவடி மையங்களில் வாக்காளர் பட்டியல் பார்வையாளராக நியமிக்கப்பட்ட பத்திர பதிவுத்துறை தலைவர்.திருமதி.பி.ஜோதிநிர்மலாசாமி,இ.ஆ.ப., அவர்கள், திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு,இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் இன்று (12.01.2020) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

இவ் ஆய்வின் போது ஸ்ரீரங்கம்சார்ஆட்சியர் திரு.சிபிஆதித்யாசெந்தில்குமார்,இ.ஆ.ப., அவர்கள், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையர்.திரு.சிவசுப்பிரமணியன், திருச்சிராப்பள்ளி வருவாய் கோட்டாட்சியர் (பொ)திரு.அன்பழகன், பொன்மலைக்கோட்ட உதவி ஆணையர் திரு.தயாநிதி, மணப்பாறை வட்டாட்சியர் திருமதி.தமிழ்கனி, ஸ்ரீரங்கம் வட்டாட்சியர் திரு.ஸ்ரீதர், ஆகியோர் உடன் இருந்தனர்.

வெளியீடு:

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருச்சிராப்பள்ளி.